# சகாத் பற்றி ஓர் ஆய்வு

ஆக்கியோன்


ஷம்சுல்உலமா, சங்கைக்குரிய ஞானபிதா
மௌலவீ அல்ஹாஜ் A. அப்துர் றஊப்
மிஸ்பாஹீ - பஹ்ஜீ
அகில இலங்கை சமாதான நீதிவான்





தொடர்புகளுக்கு : Hello - 065 - 45625
065 - 45542
065 - 45109
Mobile - 077 7733786



வெளியீடு
அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞ்ஞானப்பேரவை
காத்தான்குடி. சிறீ லங்கா.
15-11-2002

நியூ கீன் - மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகாத் பற்றி ஓர் ஆய்வு

இஸ்லாம் மார்க்கத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட **'மத்ஹப்'**கள் நான்கு உள்ளன. அவை ஷாபிஈ மத்ஹப், ஹனபீமத்ஹப், ஹன்பலீ மத்ஹப், மாலிக் மத்ஹப் என்ற பெயர்களால் அழைக்கப்படும்.

ஒரு முஸ்லிம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், எந்த மொழிபேசினாலும் மேற்கண்ட நான்கு **'மத்ஹப்'**களில் ஒன்றைத் தழுவியே அவன் தனது வணக்க வழிபாடுகளைச் செய்தல் வேண்டும்.

எவனாவதொருவன் **'மத்ஹப்'** தேவையில்லை. திருக்குர்ஆன் ஹதீது இவ்விரண்டும் மட்டும் போதுமென்று வாதிட்டால் அவன் உண்மையில் முழுப்பைத்தியக்காரனாகவே இருப்பான்.

வஹ்ஹாபிகள் **'மத்ஹப்'** தேவையில்லை என்று வாதிடுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களில் அநேகர் சகாத் தொடர்பான விபரங்களை அறிந்து கொள்ளாமல் தாம் விரும்பியவாறு சகாத் கொடுத்துவருகின்றார்கள். அத்தகையோர் விபரமறிந்து செயல்பட வேண்டுமென்பதற்காக **'சகாத் பற்றி ஓர் ஆய்வு'** என்ற தலைப்பில் ஷாபிஈ மத்ஹபைத் தழுவி அது தொடர்பான பிரதான சட்டங்களை மட்டும் இப்பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளேன். மேலதிக விபரம் தேவையானோர் சட்டக்கலை நிபுணர்களை அணுகி அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். சட்டமேதைகளில் யாராவது இதில் பிழை இருக்கக்கண்டால் எனக்குச் சுட்டிக் காட்டுமாறு அவர்களை அன்பாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சகாத் என்பது இஸ்லாத்தின் ஐம்பெருங்கடமைகளில் ஒன்று. இதன் பொருள் வளர்தல், தூய்மைப்படுத்துதல் என்பதாகும். ஏழைவரி என்று இதற்குப் பொருள் கூறுதல் பிழை.

ஒருவன் தன் உடைமைகளிலிருந்து சகாத்திற்குரிய அளவை ஏழைகளுக்கு கொடுப்பதின் மூலம் அவன் பாவத்திலிருந்தும், உலோபித்தனத்திலிருந்தும் தூய்மை பெறுகிறான். சகாத்தை நிறைவேற்றிய பறகத்தாலும் அதைப் பெற்றவர்களின் **"துஆ"** பிரார்த்தனையாலும் கொடுத்தவரின் பொருட்கள் மேலும் வளர்கின்றன. இதனால்தான் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது.

University ... 27 SEP 2020 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகாத் ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு கடமையாக்கப்பட்டது.

**நபியே! அவர்களின் செல்வத்திலிருந்து தருமத்திற்கானதை எடுத்துக்கொண்டு அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீர்களாக!**

**திருக்குர்ஆன் : 9-103**

தொழுகையை நிறைவேற்றுங்கள், சகாத் கொடுங்கள் என்று அல்லாஹ் திருமறையில் பல இடங்களில் தொழுகையுடன் சகாத்தையும் இணைத்தே கூறியுள்ளான். இதிலிருந்து சகாத்தின் முக்கியத்துவம் தெளிவாகிறது.

சகாத் கடமை என்பதைக் குறிக்கும் திருமறை வசனங்களும், நபிமொழிகளும், இமாம்களின் இஜ்மாஉவும் இருப்பதோடு அனைவராலும் வெளிப்படையாக அறியப்பட்ட கடமையாகவும் சகாத் இருக்கிறது. சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சட்டத்தை மாற்றியமைக்கும் வஹ்ஹாபிகள் கூட சகாத் கடமை என்பதை இதுவரை மறுக்க முன்வரவில்லை. அவர்களின் புதிய கொம்பியூட்டர் கண்டுபிடிப்பு இதன்பிறகு என்ன சொல்லுமோ தெரியவில்லை.

எனவே, சகாத் கடமையான ஒருவன் தன்மீது அது கடமையில்லை என்று மனமுரண்டாக மறுத்தால் அவன் **'காபிர்'** ஆகிவிடுவான்.

## சகாத் எதில் கடமை?

தங்கம், வெள்ளி, சேமித்து வைத்து உண்ணப்படும் உணவுப் பொருட்கள் திராட்சை, பேரீத்தம்பழம் ஆகிய இருவகைப்பழவகைகள், வியாபாரப்பொருட்கள், ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய மூவகைக் கால்நடைகள் முதலியவை மீது மட்டுமே சகாத் கடமையாகும்.

## யார் மீது கடமை?

ஒருவன் முஸ்லிமாகவும், புத்திசுவாதீனமுள்ளவனாகவும், வயதுவந்தவனாகவும், சுதந்திரமுள்ளவனாகவும், பொருட்களின் மீது அதிகாரம் உள்ளவனாகவும் இருப்பதோடு **'சகாத்'** கடமையாவதற்குரிய அளவுள்ள அவனின் பொருட்கள் அவனிடம் ஒருவருடகாலம் இருந்தால் அவன் மீது **'சகாத்'** கடமையாகும். எனினும் மேற்கண்ட பொருட்களின் உரிமையாளனாக சிறுவனோ, புத்தி சுவாதீனமற்றவனோ இருந்தால் இவர்களைப் பராமரிப்பவர்கள் இவர்களின் பொருட்களிலிருந்து **'சகாத்'** கொடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாருக்கு சகாத்?

***சகாத் என்பது "பகீர்" களுக்கும், மிஸ்கீன்களுக்கும், சகாத் வசூலிப்பவர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தை தழுவியவர்களுக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடனில் மூழ்கியிருப்பவர் களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் போர் செய்பவர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் உரித்தானதாக அல்லாஹ் ஏற்படுத்திய கடமையாகும். அல்லாஹ் யாவையும் அறிந்தோனும், ஞானமுடை யோனுமாயுள்ளான்.***

***திருக்குர்ஆன் : 9-60***

*இந்த வசனத்தில் சகாத் பெறத்தகுதியான எட்டுப் பிரிவினரை அல்லாஹ் கூறியுள்ளான். இவர்களில் அடிமைகள், மக்களால் தெரிவு செய்யப்பட்ட, அரசாளும் இமாம்களால் நியமிக்கப்படுகின்ற சகாத் வசூலகர்கள் ஆகிய இருபிரிவினரும் தற்காலத்தில் இல்லாததால் இவர்கள் தவிரவுள்ள மற்ற ஆறு பிரிவினருக்கும் சகாத் வழங்குவது கடமையாகும். இந்த ஆறு வகையினர் அல்லாத வேறு நபர்களுக்கு வழங்கினால் சகாத் நிறைவேறாது.*

## பகீர் - மிஸ்கீன்

*அறவே பொருள் இல்லாதவனும், தனக்கும், தான் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டியவர்களுக்கும் வருவாய்தருகிற ஹலாலான சம்பாத்தியம் இல்லாதவனும் பகீர் ஆவார்கள். இதன்படி ஒருவனுக்கு ஹறாமான வருவாய் தேவைக்கதிகமாக இருந்தாலும் அவனும் **'பகீரே'** தான்.*

*ஹலாலான சம்பாத்தியம் இருந்தும் போதிய வருவாய் இல்லாத ஒருவன் **'மிஸ்கீன்'** ஆவான்.*

*ஒருவனுக்கு விசாலமான வீடு, பணியாட்கள், உயர்தர ஆடைகள், தேவையான நூல்கள் அல்லது பெண்களுக்குத் தேவையான நகைகள் ஆதியன இருப்பதோடு அவனின் அன்றாடச் செலவுக்குச் சிரமப்பட்டால் அவனும் **பகீர்** அல்லது **மிஸ்கீன்** என்ற பெயர் பெற்று சகாத் பெறுவதற்கு தகுதியுடையவனாகிறான். இது போன்றே ஒருவன் வியாபாரத்தில் அல்லது விவசாயத்தில், கால் நடைவளர்ப்பில் ஈடுபட்டு சகாத் கொடுக்கும் அளவுக்கு அவனின் வருவாய் இருந்தாலும் அவனுக்கும், அவனது குடும்பத்துக்கும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாடச் செலவுக்குப் போதுமான வருவாய் இல்லாவிட்டால் அவனும் சகாத் பெறத்தகுதியானவனாகின்றான். ஆகவே, இந்த அடிப்படையில் ஆயிரம் பொற்காசு கொண்டு வியாபாரம் செய்யும் ஒருவன் சகாத் பெறுவதற்கு தகுதியுள்ளவனாகவும், கோடாலியும் கயிறுமே உடைமையாயுள்ள, போதிய வருவாயுள்ள விறகு வெட்டி சகாத் பெற தகுதியற்றவனாகவும் ஆகிவிடுகிறான். என்று இமாம் கஸாலீ றஹ் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஹலாலான தொழில் இருந்தும் அதில் ஈடுபடாமல் மார்க்கக் கல்வியை கற்பவர்களுக்கும் சகாத் வழங்கலாம். மார்க்க கல்வி கற்கும் மாணவர்கள் இவர்களில் அடங்குவர். ஆனால் தொழிலில் ஈடுபடாது மேலதிக வணக்கங்களில் ஈடுபடும் ஆபித் வணக்க சாலிகளுக்கு சகாத் வழங்குவது கூடாது. ஏனெனில் கல்வி கற்பது கடமையாகும். மேலதிக வணக்கங்களோ அவரவர் விருப்பத்திற்குரிய வையாகும்.

**கடன்**

ஒருவன் தனக்காகவும், தன் குடும்பத்தின் ஹலாலான செலவினங்களுக்காகவும் கடன் வாங்கினான். அவனால் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதபோது அவன் சகாத் பெறத் தகுதியுடையவனாகின்றான்.

பள்ளிவாயல் மற்றும் கல்விக்கூடங்கள் கட்டுதல் போன்ற பொதுச் சேவைக்காகவும், ஏழைகளின் திருமணம் நடத்தி வைத்தல், இருவருக்கிடையில் சமாதானம் செய்தல் போன்ற சமூகசேவைக் காகவும், கைதிகளை விடுவித்தல், கடன் பெற்றவருக்காக பிணை நிற்குதல் போன்ற நற்சேவைக்காகவும் கடன்பட்டவர்கள், அவர்கள் செல்வந்தர்களாயிருந்தாலும் இக்கடன்களை திருப்பிச் செலுத்த சகாத் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் செல்வந்தன் தனது செல்வத்திலிருந்தே இவ்வாறு செலவு செய்திருந்தால் அதற்காக சகாத் பெறுவது கூடாது. பள்ளிவாயல்கள் மற்றும் கல்விக்கூடங்கள் போன்ற பொதுநலத் தொண்டுக்காக கடன்பெற்றிருந்தால் மட்டும் கடன் நிவாரணமாக சகாத் பெறமுடியும். உதாரணமாக கட்டடப் பொருட்களை கடனாக வாங்குவது போலும், கட்டடத் தொழிலாளர்களுக்கு கடனாகப் பணம் வாங்கிக் கொடுப்பது போலும். இந்தக் கடன் நிவாரணமாக சகாத் பெறமுடியும். ஆனால் சகாத் பணம் திரட்டி இவைகளைக் கட்டுவது கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதிவிடுதலைக்காக மற்றும் கடன்பட்டவனுக்காக பொறுப்பேற்றல் போன்ற நற்பணிகளில் கைதியும் கடன்பெற்றவனும் பொறுப்பேற்ற தொகையை வழங்குவதற்குரிய செல்வந்தர் களாயிருந்தால் இதற்காக சகாத் பெறுவது கூடாது. கடன் கொடுத்த செல்வந்தன் கடன்பெற்ற ஏழையிடம் கொடுத்த கடனை வாங்கி அதை அவனுக்கே திரும்பவும் சகாத் ஆகக் கொடுக்கலாம். திருப்பி வாங்காமல் **"கடன் தொகையை சகாத் பணமாக வைத்துக்கொள்"** என்று கூறினாலோ, **"இப்போது நான்தரும் சகாத் பணம் கொண்டு என் கடனைத் திருப்பித் தா"** என்ற நிபந்தனையுடன் சகாத் வழங்கினாலோ சகாத் நிறைவேறாது.

**போராளிகள்**

போரில் பெறும் இலாப நஷ்டங்களைக் கருதாமலும், போராளியாக அரசிடம் பதிவு செய்து கொள்ளாமலும் அல்லாஹ்வுக் காகப் போர்புரியும் போராளிகளின் பயணச் செலவுக்காகவும், அவர்களின் குடும்பச் செலவுக்காகவும், யுத்த தளவாடங்கள் வாங்கு வதற்காகவும் சகாத் வழங்க வேண்டும்.

**வழிப்போக்கர்கள்**

சகாத் வழங்கும் ஊரைக் கடந்து செல்லும் பயணிகள் அல்லது அந்த ஊரில் இருந்து பயணம் புறப்பட விரும்பும் பயணிகள் ஆகியோர் வழிப்போக்கர்கள் ஆவர். பயணியின் நோக்கம் சுற்றுலாவாயிருப்பினும் சகாத் வழங்கலாம். எனினும் பயணத்துக்கான பணம் இல்லாதிருத்தல், அந்தப் பயணம் பாவத்திற்கான பயணமா இல்லாதிருத்தல் இரண்டும் அவசியம்.

**புதிய முஸ்லிம்கள்**

இவர்கள் நம்மிடம் உதவியை எதிர்பார்த்தால் அல்லது இவர்களுக்கு சகாத் வழங்குவதால் இவர்களின் சமூகத்தைச் சேர்ந்த மற்றவர்களும் இஸ்லாமின்பால் ஈர்க்கப்படுவார்கள் என்ற நோக்கம் இருந்தால் இவர்களுக்கும் சகாத் வழங்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விபரம்**

1) சகாத் பெறத் தகுதியானவர்கள் குறைவாகவும், சகாத் பொருள் அதிகமாகவும் இருந்தால் தகுதியுள்ள அனை வருக்கும் சகாத் வழங்கவேண்டும். சகாத் பொருள் குறைவாக இருந்தால் சகாத் பெறத்தகுதியான ஆறு பிரிவினரில் ஒவ்வொரு பிரிவிலும் குறைந்தது மூன்று நபர்களுக்காவது கட்டாயமாகக் கொடுத்தாக வேண்டும். இவ்வாறு கொடுப் பதற்காக சகாத் பொருளை ஆறு சம பங்குகளாக பங்கீடு செய்வது அவசியமாகும். ஆனால் ஒவ்வொரு பிரிவிலும் வழங்கப்படும் மூன்று நபர்களுக்கிடையில் சமபங்கீடு அவசியமில்லை.

2) ஏதாவது ஒரு பிரிவினர் முற்றிலும் இல்லாதபோது அல்லது மூன்று நபர்களைவிடக்குறைவாக இருக்கும்போது இப்பிரிவினர் களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை வேறு பிரிவினர்களுக்கு அல்லது அவர்களிலேயே மீதமுள்ளவர்களுக்குக் கொடுக்கலாம்.

3) உடைமைகள் இருக்கும் ஊர்களிலேயே சகாத் வழங்க வேண்டும். அவ்வூரை விட்டு வேறு ஊருக்கு சகாத்தை கொண்டு செல்வது கூடாது. அது சகாத் கொடுப்பவனின் சொந்த ஊராக இருப்பினும் சரியே.

4) வியாபாரப் பொருட்களின் சகாத்தை பணமாகவும், தங்கம், வெள்ளி, விவசாயப் பொருள்கள், கால்நடைகள் ஆகியவற்றில் அந்தந்தப் பொருட்களாகவும் மட்டுமே சகாத் வழங்கவேண்டும். இதற்கு மாற்றமாக வழங்கினால் சகாத் நிறைவேறாது.

மேற்கண்ட இந்நான்கு சட்டப்பிரிவுகளிலும் ஷாபிஈ மத்ஹபின் இமாமுக்கும், மற்ற மூன்று மத்ஹபின் இமாம்களுக்கும் இடையே கருத்துவேறுபாடுகள் இருப்பதால் அவர்களின் சொற்களைத் தழுவி சகாத் கொடுப்பதில் தவறில்லை.

5) நபீ ஸல் அவர்களின் குடும்பத்தவர்களான ஹாஷிம், முத்தலிப் ஆகியோரின் வழித்தோன்றல்களுக்கும், மற்றும் செல்வந்தர் களுக்கும், காபிர்களுக்கும், குடும்பத்தலைவனால் போதுமான அளவு ஜீவனாம்சம் பெறுபவர்களுக்கும் சகாத் கொடுப்பது கூடாது. கொடுத்தால் நிறைவேறாது. தன் ஆயுட்காலத்துக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமான பொருள் உள்ளவன், அல்லது அன்றாடம் தேவையான போதிய வருவாய் ஈட்டித்தரும் தொழில் உள்ளவன் செல்வந்தன் எனும் பெயர் பெறுவான்.

## உறவினர்

மனைவி, மக்கள், மக்களின் வழித்தோன்றல்கள் ஆகியோர் களுக்காக குடும்பத் தலைவனும், தாய், தந்தை, தாய் தந்தையின் பெற்றோர் ஆகியோருக்காகப் பிள்ளைகளும் ஜீவனாம்சம் கொடுப்பது கடமையாகும். இவர்கள் தவிரவுள்ள உறவினன் ஒருவன் மற்ற வருக்காக ஜீவனாம்சம் கொடுப்பது மேலதிகமானதாகும். கடமையான ஜீவனாம்சம் போதுமானதாக இல்லாவிட்டால் மட்டுமே ஜீவனாம்சம் கொடுப்பவர்கள் தம்மிடம் ஜீவனாம்சம் பெறுபவர்களுக்கு சகாத் கொடுக்கலாம். உதாரணமாக,

1) பெற்றோருக்கு அன்றாடச் செலவுக்கு ஐம்பது ரூபாய் தேவைப் படுகிறது. ஆனால் மகனால் நாற்பது ரூபாய் மட்டுமே கொடுக்க முடிகிறது. இப்போது மகனிடமிருந்து பெற்றோர் சகாத் பெறலாம்.

2) ஒருவன் தன் சகோதர சகோதரிகளுக்கு அன்றாடம் போதுமான அளவு ஜீவனாம்சம் கொடுத்தாலும் தனது சகாத் பணத்தை அவர்களுக்கு சகாத் ஆகவும் கொடுக்கலாம். ஏனெனில் சகோதர சகோதரிகளுக்கு வழங்கப்படுவது மேலதிக ஜீவனாம் சமாகும்.

3) கடமையான ஜீவனாம்சம் போதுமானதாக இருந்தாலும் பகீர் மிஸ்கீன் என்ற காரணம் தவிரவுள்ள வழிப்போக்கன், போராளி, கடனாளி போன்ற மற்றக் காரணங்கள் கொண்டு ஜீவனாம்சம் கொடுப்பவர்களிடமிருந்தே சகாத் பெறலாம்.

4) மனைவிக்கு கணவன் ஜீவனாம்சம் கொடுப்பதோடு கணவன் ஏழையாகவும், மனைவி செல்வமுள்ளவளாகவும் இருந்தால் மனைவி தன் சகாத் பொருளை கணவனுக்குக் கொடுக்கலாம். இவ்வாறு கொடுப்பது ஸுன்னத்துமாகும். பாவிகளுக்கு சகாத் கொடுத்தால் கடமை நிறைவேறும். ஆயினும் சகாத் பொருளை அவர்கள் பாவத்துக்காகப் பயன்படுத்துவார்கள் என்று உறுதி யாகத் தெரிந்தால் பாவிக்கு சகாத் கொடுப்பது ஹறாமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தேச மதிப்பீடு

சகாத் வழங்கும் விடயத்தில் உத்தேச மதிப்பீடு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒருவன் தனது பொருளாதாரத்தை இஸ்லாம் கூறியுள்ள முறைப்படி கணக்கிட்டு சகாத் வழங்கவேண்டும். ஒருவன் சரியாகக் கணக்கிடாமல் தனது பொருளாதாரம் பத்து இலட்சம் இருக்கலாம் அல்லது இருபது இலட்சம் இருக்கலாமென்று உத்தேச மதிப்பீடு செய்து சகாத் வழங்கினால் அது சகாத் ஆகமாட்டா. செல்வந்தர்களிற் பலர் இவ்வாறு செய்தாலும் இது பிழையானதே.

## நிய்யத்

சகாத் கொடுக்கும் போது மனதில் நிய்யத் செய்வது கடமையாகும். வாயால் மொழிவது அவசியமில்லை. **"இது என் சகாத் பொருளாகும்"** என்றோ, **"என்மீது கடமையான தர்மம்"** என்றோ, **"என் பொருளின் மீது கடமையான தர்மம்"** என்றோ, நிய்யத் செய்து கொள்ளுதல் வேண்டும்.

## சகாதுல் பித்ரி

நோன்புப் பெருநாளன்று கொடுக்கப்படும் தானியக் கொடைக்கு இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. நோன்பு கடமையாக்கப்பட்ட ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டிலேயே இதுவும் கடமையாக்கப்பட்டது.

ஒரு முஸ்லிம் தனக்காகவும், தான் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டியவர்களுக்காகவும், பெருநாள் பகல் மற்றும் இரவு உணவுக்கும் குடும்பச் செலவுக்கும், செலுத்த வேண்டிய கடன்தொகைக்கும் ஏற்பாடு செய்தபின் அவரிடம் பொருள் வசதி இருந்தால் தனக்காகவும், தான் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டியவர்களுக்காகவும் **"சகாதுல்பித்ரி"** கொடுப்பது அவர்மீது கடமையாகும்.

நோன்பின் இறுதிவரை வறியவனாயிருந்து பெருநாள் இரவுதான் அவனுக்கு வசதிவாய்ப்பு ஏற்படுகிறதென்றால் அவன் மீதும் **"சகாதுல் பித்ரி"** கடமையாகும்.

இதுபோன்றே பெருநாள் இரவு பிறந்த பிள்ளைக்கும் அன்றிரவு மணமுடித்த மனைவிக்கும் **சகாதுல் பித்ரி** கொடுப்பது கடமையாகும். ஒரு நபருக்கு இரண்டேகால் கிலோ, அல்லது ஒன்றரை பக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது மூன்று லீட்டர் அளவுள்ள புழக்கத்தில் பிரதான உணவாகக் கொள்ளும் தானியத்தை வழங்கவேண்டும்.

ஒருவர் தனக்காக **சகாதுல் பித்ர்** வழங்கும்போது தான் இருக்கும் ஊரிலுள்ள ஏழைகளுக்கும், தன்மனைவி மக்கள் மற்றும் பெற்றோர்களுக்காக வழங்கும் போது அவர்கள் இருக்கும் ஊரிலுள்ள ஏழைகளுக்கும் அந்தந்த ஊரில் பிரதான உணவாகக் கொள்ளும் தானியத்திலிருந்து கொடுக்க வேண்டும். தானியங்களின் கிரயத்தையோ, கொடுக்கப்படும் ஊரிலுள்ள பிரதானமில்லாத தானியங்களையோ, வண்டு, புழு அரித்த தானியங்களையோ கொடுப்பது கூடாது. கடைசி நோன்பின் மக்ரிப் முதல் பெருநாள் தொழுகையை நிறைவேற்றும் வரை **"சகாதுல்பித்ர்"** கொடுப்பதற்கான காலமாகும்.

பெருநாள் தொழுகைக்குப்பின் காலம் தாழ்த்துவது **"மக்றூஹ்"** ஆகும். றமழான் மாதம் தொடக்கத்திலிருந்து கொடுப்பது கூடும். பெருநாளுக்குப்பின் பிற்படுத்துவது ஹறாம் ஆகும். அண்டை வீட்டுக்காரரோ, உறவினரோ **சகாதுல்பித்ர்** கொடுக்கும் சமயம் அங்கில்லாதிருந்தால் அன்றைய மாலை சூரியன் மறையும் வரை அவருக்காக அதனை ஒதுக்கி வைத்திருந்து கொடுப்பது **'ஸுன்னத்'** ஆகும்.

## கவனிக்கப்படவேண்டிய பங்காளர்கள்

பள்ளிவாயல்களின் பேஷ்இமாம்கள், முஅத்தின்கள், மௌலவீமார்கள், அறபுக் கல்லூரிகளின் ஹழ்றத்மார்கள், அரச ஊழியர்கள் ஆகியோர் சகாத் விடயத்தில் கவனிக்கப்பட வேண்டியவர்களாவர். மேற்கண்ட இவர்களில் ஒரு சிலர் தவிர மற்றவர்கள் யாவரும் பகீர் அல்லது மிஸ்கீன் பிரிவைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள். ஆகவே சகாத் வழங்குவோர் இவர்களையும் கவனத்திற்கொள்வது அவசியம்.

## இஃதிகாப் இருக்கும் செல்வந்தர்கள்

றமழான் பிற்பகுதியில் பள்ளிவாயல்களில் இஃதிகாப் இருப்பது விஷேடவணக்கங்களில் ஒன்றாகும்.

இவ்வணக்கம் செய்யவிரும்பும் செல்வந்தர்கள் றமழான் இருபதாம் நாள் மூட்டை முடிச்சுகளுடன் பள்ளிவாயலுக்குச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநாள் தொழுகையை முடித்துவிட்டே வீடு திரும்புகின்றனர். றமழானின் பிந்திய பத்து நாட்களையும் பள்ளிவாயலிலேயே கழிக்கின்றனர்.

ஏழைகள் இவர்களின் இல்லங்களுக்கு சகாத் பெறுவதற்காகச் சென்றால் "**முதலாளி இ:.திகாப் இருக்கிறார். பெருநாளன்று வாருங்கள்**" என்று மனைவி சொல்லியனுப்புகிறாள். பெருநாளன்று அவர்கள் சென்றால் சகாத் கொடுத்து முடிந்துவிட்டதென்ற பதில்தான் அவர்களுக்கு கிடைக்கின்றது.

எனவே, இ:.திகாப் இருக்கச்செல்லும் செல்வந்தர்கள் தமது சகாத் நிதியை தாமே முன்கூட்டிக் கொடுத்துவிட்டுச் செல்லவேண்டும் அல்லது மனைவியிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்லவேண்டும் ஏழைகளை ஏமாற்றக்கூடாது.

**<u>சம்மேளனத்தின் மதிப்புக்குரிய தலைவர் அவர்களுக்கு,</u>**

நீங்கள் தற்போது செல்வந்தர்களிடமிருந்து சகாத்நிதி திரட்டும் திருப்பணியில் குதித்திருக்கின்றீர்கள். நல்லகாரியம்தான். நன்றாகச் செய்யுங்கள். ஆனால் உலமாஉகளின் பத்வாவை மட்டும் சரிகண்டு செயற்பட்டுவரும் நீங்கள் "**முர்தத்**"களிடம் "**சகாத்**" கேட்டு கடிதம் எழுதுவது எந்தவகையில் நியாயமானதென்று உங்களைக் கேட்கின்றேன். இதை உங்களின் இஸ்லாம் கூட அனுமதிக்குமா? 'முர்தத்' சகாத் கொடுப்பது கடமையா? முர்தத் இடமிருந்து சகாத் எடுப்பது ஆகுமா? விடை தாருங்கள். உங்களுக்கு விடை தெரியாது போனாலும் உங்களின் '**உலமாஉ**' களிடம் கேட்டாவது விடை சொல்லுங்கள்.

நீங்கள் உங்கள் பணியைத் தொடருங்கள். ஆயினும், என்னையும் எனது கருத்தைச் சரிகண்ட பல்லாயிரம் முஸ்லிம்களையும் முர்தத் மதம்மாறியவர்களென்று நீங்கள் கருதுவதால் மதம் மாறியவர்களிடம் 'சகாத்' கேட்காதீர்கள்! அவர்களிடம் கேட்பதும் சட்டவிரோதம்! அவர்களுக்கு கொடுப்பதும் சட்டவிரோதம்! நீங்கள் நீதியாகவும், நடுநிலையாகவும் பாரபட்ச மின்றியும் செயற்படும்வரை தவ்ஹீத் குடும்பம் உங்களுக்கு எந்த ஒரு விடயத்திலும் ஒத்துழைப்பு வழங்காதென்பதை அறிந்து கொள்ளுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பினிய தவ்ஹீத் வாதிகளே!**

**ஞானவழித்தோழர்களே!**

**அஸ்ஸலாமு அலைக்கும்**

நீங்கள் **'தவ்ஹீத்'** குடும்ப உறுப்பினர்கள் என்பதால் பின்வரும் கருத்துக்களை உங்களின் கவனத்துக்குத் தருகின்றேன்.

நீங்கள் **'சகாத்'** வழங்குபவர்களாயின் உங்களின் **'சகாத்'** நிதியை மேற்கண்ட பிரிவினர்களுக்கு உங்கள் கையாலேயே கொடுங்கள். மேற்கண்ட பிரிவினர் உங்கள் உறவினர்களிலும், அயல்வீட்டவர்களிலும் இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குங்கள். உங்களிடம் சம்மேளனம் **சகாத்** கேட்டுவந்தால் அவர்களுக்கு கொடுத்துவிடாதீர்கள்! அவர்களுடன் பிரச்சினைப் பட்டுக் கொள்ளாமலும், அவர்களை வேதனைப்படுத்திவிடாமலும் அவர்களுக்கு வந்தனம் கூறி வழியனுப்பிவையுங்கள்.

ஏனெனில், அவர்கள் என்னையும், உங்களையும் முஸ்லிம்கள் என்று ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வூர்த்தலைவர்கள் என்ற வகையில் நடுநிலைவாதிகளாயிருக்க வேண்டிய அவர்கள் என்னையும், உங்களையும் மதம்மாறியவர் களென்று ஒதுக்கி வைத்துள்ளார்கள். தமது அமைப்புக்கு பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் என்று பெயர் வைத்துக்கொண்ட அவர்கள் பள்ளிவாயல் பட்டியலில் நமது பத்ரிய்யஹ் ஜும்அஹ் பள்ளிவாயலை சேர்த்துக் கொள்ளவு மில்லை. முஸ்லிம் நிறுவனங்கள் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட நமது நிறுவனங்களான **அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞ்ஞானப்பேரவை, புனித குத்பிய்யஹ் மஜ்லிஸ்** இவ்விரண்டையும் சேர்த்துக்கொள்ளவுமில்லை. ஆகவே அவர்கள் நீதியாகவும், நடுநிலையாகவும், பாரபட்சமின்றியும் செயல்படும்வரை அவர்களுக்கு எந்த ஓர் ஒத்துழைப்பும் வழங்க வேண்டாமென்று தவ்ஹீதின் பெயரால் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படம்

இப்பிரசுரத்தின் முன்பக்கத்தில் நீங்கள் காண்பது பத்ரிய்யஹ் ஜும்அஹ் பள்ளிவாயலின் முகப்புத்தோற்றமாகும். இப்பள்ளிவாயல் 1960ம் ஆண்டு மர்ஹூம் அல்ஹாஜ் அப்துல் ஜவாத் வலீ றஹ் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

ஐங்காலத் தொழுகைக்காக மட்டும் ஸ்தாபிக்கப்பட்ட இப்பள்ளிவாயல் தவ்ஹீத் புரட்சியின்பின் 1979ம் ஆண்டு முதல் ஜும்அஹ் பள்ளிவாயலாக இயங்கிவருகின்றது.

இலங்கையில் வஹ்ஹாபிஸத்தைப் பகிரங்கமாக எதிர்த்தும், ஸுன்னத்வல்ஜமாஅத் கொள்கையையும், தரீகஹ் ஞானங்களையும், இறைஞான அகமியங்களையும் ஆணித்தரமாக எடுத்துக்கூறியும் வருகின்ற ஒரேயொரு ஸ்தாபனம் இதுமட்டுமேயாகும்.

நாளுக்கு நாள் மக்கள் கூட்டம் பெருகிவருவதால் இப்பள்ளிவாயலை நான்கு கோடி ரூபா செலவில் புதிதாகக் கட்டியெழுப்ப இதன் நிர்வாகம் திட்டமிட்டுச் செயல்பட்டுவருகின்றது.

எனவே, இப்பள்ளிவாயலைக் கட்டிமுடிக்க **'ஸுன்னத்வல் ஜமாஅத்'** கொள்கைவாதிகளினதும், **'தரீகத்'** வழிநடக்கும் நல்லடியார்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

*தலைவர்*
**ப-ஜு-ப- வாயல்**
**காத்தான்குடி.**

...ersity of Peradeniya
27 SEP 2020
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org